# ஸ்வாமி ஜ்யோதிர்மயானந்தாவின் சிறு கதைகள்

# Swami Jyothirmayananda’s short stories

**1931 ஆம் ஆண்டு பீகார் மானிலத்தில் ஒரு ஆசாரமான குடும்பத்தில் பிறந்து, 1953 ஆம் ஆண்டில் சன்யாச தீட்சை பெற்றவர் ஸ்வாமி ஜ்யோதிர்மயானந்தா அவர்கள். அமெரிக்காவில் மியாமி என்ற மானிலத்தில் 1969 ஆம் ஆண்டு யோக ஆராய்ச்சி நிலையம் மற்றும் ஆசிரமம் ஒன்றை நிறுவி யோக வழி முறைகளைக் கற்றுக் கொடுக்கும் அவர் பல்வேறு புத்தகங்கள் எழுதி உள்ளார். அவர் எழுதிய சிறு கதைகள் மனதை சிந்திக்க வைப்பவை. அதில் ஒன்றுதான் கீழே உள்ள கதையும். அவர் கொடுத்துள்ள அனுமதியும் கீழே உள்ளது.**

**Swami Jyotirmayananda was born in the year 1931 in Bihar to a noble and orthodox family and took to Sanya Diksha in the year 1953. He founded a Yoga research center and ashram in Miami, USA in the year 1969 and has been teaching the art of Yoga and its practices. Besides he has also authored several books. The short stories written by him are thought provoking. This bilingual story is one in them. The permission given by him is also reproduced below.**

**Swamiji** <swamiji@bellsouth.net>
To: nrj_1945@yahoo.com

Sun, 16 Jul, 2006 at 3:53 pm

N. R. Jayaraman

Blessed Self,
Adorations!

Your article was forwarded to me by Dr. Shashi B. Mishra.
I am pleased to see it.

You have my permission to publish translated versions (in Tamil))
of any article from my publications.

Dissemination of spiritual knowledge is the greatest
act of Divine Worship.

May God bless you with Success!

With regards Prem and Om,
Yours in the Lord
Swami Jyotirmayananda

# இருண்ட நகரம்

## சாந்திப்பிரியா



அந்த நகரத்தின் பெயர் 'அந்தேரி' நகரம். ஹிந்தி மொழியில் 'அந்தேரி' என்றால் 'இருண்ட அல்லது குருடு' என்று அர்த்தம். அது ஒரு விசித்திரமான நகரம். நகைகள் செய்ய பயன்படும் தங்கத்தில் இருந்து ஒரு கிலோ உருளைக் கிழங்கு, மிட்டாய் என எந்த பொருளை வாங்கினாலும் அவை அனைத்தின் விலைகளும் ஒன்றுதான். அதற்கு காரணம் அந்த நகரத்து மன்னனின் மூடத்தனம். அனைவரையும் திருப்திப்படுத்தும் விதத்தில் அப்படிப்பட்ட உத்தரவை பிறப்பித்திருந்தான். ஆகவேதான் அப்படி ஒரு முட்டாள்தனமாக உத்தரவை அந்த நகரை ஆண்ட மன்னன் போட்டதினால் அதை இருண்ட நகரம் என்று அழைத்தனர். அந்த ஊரின் பக்கத்துக்கு ஊரின் ஆஸ்ரமத்தில் ஒரு குருவின் சிஷ்யனாக கோவர்தன் தாஸ் என்பவன் இருந்தான். அவன் அந்தேரி நகரத்தில் வசிப்பதை நன்மையாகக் கருதினான். அதற்குக் காரணம் தங்கம் மட்டும் விலை குறைவாக இருக்கவில்லை, சாப்பிடும் பண்டங்களும்,

முக்கியமான இனிப்புப் பண்டங்களின் விலை குறைவானது. ஆசிரமத்தில் அவை அரிதாகவே கிடைக்கின்றன என்று மனதில் நினைத்தவன் ' நாமும் அங்கு போய் வாழலாமே' என குருவிடம் கேட்டதற்கு அவர் அது ஒரு பயங்கர நகரம் என்று கூறி அங்கு செல்ல மறுத்து விட்டார். அவன் விடவில்லை பல வாதங்களை எடுத்து வைத்து அவரை கட்டாயப்படுத்த முயல அவன் ஒரு பாடம் பெற வேண்டும் என நினைத்து அவனிடம் 'நீ வேண்டுமானால் அங்கு போய் தங்கிக் கொள். ஆனால் உனக்கு எப்பொழுதாவது தீர்க்க முடியாத கஷ்டம் நேர்ந்தால் என்னை நினைத்துக் கொள்' என்று கூறி அவனை அனுப்பி விட்டார்.

அந்த ஊருக்குச் சென்ற கோவர்தன் தாஸ் வாழ்க்கையை அனுபவித்தபடி தின்று கொழுத்தான். அதன் விளைவு குண்டாகி விட்டவன் கழுத்து மிகவும் பெருத்து விட்டது. சில நாட்கள் சென்றன. அந்த ஊர் அரசனிடம் விசித்திரமான ஒரு வழக்கு சென்றது. ஒரு விவசாயி அரசனிடம் சென்று அடுத்த வீட்டு சுவர் இடிந்து விழுந்து தன்னுடைய மாடு செத்து விட்டது என அதற்கு நீதி கேட்டான். 'சுவரை இழுத்து வாருங்கள்' என மூடனான மன்னன் கட்டளை இட்டான். 'அந்த சுவர் என்ன செய்யும், அது பேச முடியாதே ஆகவே அந்த சுவற்றின் வீட்டுக்காரனை அழைத்து வரலாம்' என மந்திரி கூற அந்த வீட்டுக்காரன் அழைத்து வரப்பட்டான். வந்த வீட்டுக்காரனோ 'ஐயா, நான் என்ன பாவம் செய்தேன். அந்த சுவரைக் கட்டியவன் அல்லவா சுவற்றை வலுவாகக் கட்டவில்லை' என்று தன் வாதத்தைக் கூற, சுவற்றைக் கட்டியவன் அழைத்து வரப்பட, வந்த அவன் 'ஐயா, நான் சிமெண்ட் கலவை செய்து கொண்டு இருந்த பொழுது எதிர் பக்கத்தில் நடனமாடிக் கொண்டு இருந்த ஒரு பெண்ணின் அழகில் மயங்கி அவளை கவனித்ததினால் தவறு ஏற்பட்டு விட்டது' என்று தன்னுடைய நியாயத்தைக் கூறினான். அடுத்து அந்தப் பெண் அழைத்து வரப்பட்டாள். நேரமாகி விட்டதினால் அவளிடம் ஒன்றும் கேட்காமல் அவளுக்குத் தூக்கு தண்டனை விதித்தான் மன்னன். ஆனால் ஒல்லியாக இருந்த அவள் கழுத்து தூக்குக் கயிற்றில் இருந்து வெளியே வந்தது.

‘நேரம் ஆகி விட்டது மாலைக்குள் தூக்கு தண்டனையை நிறைவேற்ற வேண்டும்' என மன்னன் கோபமுற அந்த கயிற்றுக்கு தேவையாக குண்டு கழுத்தை கொண்டவனைத் தேடி அழைத்து வருமாறு கூறி விட, கோவர்தன் தாஸ் அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டான். அவனை தூக்கு மேடைக்கு கொண்டு சென்றனர். வருத்தமுற்ற அவன் 'எத்தனைக் கூறியும் குருவின் பேச்சை மதிக்காமல் இங்கு வந்து மாட்டிக் கொண்டோமே’ என அழுதபடி குருவை நினைத்துக் கொண்டான். கோவர்தன் தாஸ் நினைத்த மட்டில் குருவும் அங்கு வந்து விட்டார். அவர் மன்னனிடம் 'ஐயா என்னுடைய சிஷ்யனை தூக்கில் போடாதீர்கள் அவனுக்கு பதில் என்னை தூக்கில் போடுங்கள்’ எனறு கெஞ்சத் துவங்கினார். குருவைத் தூக்கில் போடக் கூடாது என்னைத் தூக்கில் போடுங்கள் என கோவர்தன் தாஸ் அரசனிடம் வேண்டுகோள் விட்டான். இருவரும் தத்தம்மை தூக்கில் போடுமாறு கேட்டபோது 'சிஷ்யனுக்குப் பதில் உங்களை ஏன் தூக்கில் போடவேண்டும் என அடம் பிடிக்கின்றீர்கள்' என்று கோபத்துடன் குருவிடம் மன்னன் கேட்க 'ஐயா, இவன் தூக்கில் தொங்கப் போகும் நேரம் மிக புண்ணிய காலம். இறந்தவுடன் அவன் நேராக சொர்கத்திற்கு சென்று விடுவான். அவன் சொர்கத்துக்கு செல்வதற்கு முன்பாகவே நான் அங்கு சென்று விட ஆசைப்படுகிறேன். ஆகவே என்னைத் தூக்கில் போடுங்கள் என்று கெஞ்சுகிறேன்’ எனக் கூற அதைக் கேட்ட மன்னன் கோபமுற்றுக் கத்தினான் ‘என்னை அத்தனை முட்டாள் என எண்ணி விட்டாயா? சொர்கத்துக்குப் போக உங்களை விட எனக்குத்தான் அதிக தகுதி உள்ளது. அதை உங்களுக்கு விட்டுக் கொடுப்பேனா?’ என்று கூறிவிட்டு தானே தூக்கு மேடையேறி தன்னைத் தூக்கில் இடுமாறு ஆணையிட மன்னன் கழுத்தில் தூக்குக் கயிறு மாட்டப்பட அவன் மடிந்து போனான். மரணத்தில் இருந்து தப்பிய சிஷ்யனை அழைத்துக் கொண்டு குருவும் அந்த அந்தேரி நகரத்தை விட்டு வெளியேறினார்.

# The Dark City

## Santhipriya



The name of the city was Andheri. Andheri in Hindi means blind or dark. It was a strange city. Whatever you buy, whether a Kilo of Potato or Candy or a Gold bar for making jewelry, the prices of all were same. The same price for any and every item was due to the fancy orders of the King who thought that such an act would keep his folks happy. That is why the city was called Andheri Nagar (nagar meaning city). In the ashram of the adjacent city lived Govardhan Das, disciple of a Guru. He desired to move the ashram to the city of Andheri because everything including sweets were cheaper and same priced. The other reason was that they were not made available in the ashram. When he expressed his desire to his Guru, he refused to move the ashram as it was a terrible city. But when the disciple insisted on moving to the city of Andheri, his Guru thought

that he needed a lesson and therefore allowed Govardhan Das to go and live there if he so desired and in the event he faced any trouble, he should think of him (Guru) and he would be there to help him.

Govardhan Das went to Andheri city, settled there enjoying life eating whatever he liked as they were low priced and freely available with the result he became fatter specially his neck which almost merged with his body. Days passed. One day a strange case went before the king. A farmer pleaded with the King for justice as his neighbor's wall had collapsed, fell on his cow causing it death. The foolish King ordered the wall be paraded before him. When it was pointed out that the wall cannot be moved, the King asked the owner of the wall be paraded before him. The owner of the land where the wall existed was brought and he pleaded that since he had not constructed the wall, only the mason was responsible for it and so the mason was called for questioning. The mason pleaded that while he was mixing the cement and sand for plastering, he was attracted by a beautiful lady dancing at a distance away and hence she was responsible. She was called and the King ordered that she be hanged for diverting the attention of the mason. Since she was very thin lady the noose was too loose to fit in her neck and came out even after tightening it around her neck. Therefore the King asked someone whose neck would fit into the noose rope should be brought to complete the process of punishment of hanging and Govardhan Das was brought because his neck suited to be fitted into the noose rope. Govardhan Das repented that he unnecessarily came to the city much against the advice of his Guru and prayed to him to save him from the gallows. In the next few minutes he saw his Guru was standing before the King pleading that he be hanged instead of his disciple which was not acceptable to the disciple

who wanted the King to only hang him. When both the disciple and the Guru kept on crossing with each other pleading that they be hanged, the angry King asked the Guru why he pleaded to be sent to the gallows. The clever Guru told the King that the time of hanging was so much auspicious that those who get hanged would straight away go to heaven and therefore he wanted to go to the heaven before his disciple go there. Hearing the reply of the Guru, the King thought for a while and shouted angrily 'Do you think I am so stupid to lose my right to go to the heaven before you people go? So I am best suited to go to heaven before any of you go'. Saying so he asked the hangman to hang him (the King) without wasting time and died in the gallows. The Guru quietly slipped away from there taking his disciple with him escaping death.